வரப்பட்டிருக்கின்றன. 140க்கு மேற்பட்ட நூல்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. எப்போதைக்கப்போது நூல்கள் பற்றுக்குறை ஏற்படுகிறதோ அவற்றை மறுபடியும் புதுப்பித்து வழங்கும் முயற்சியை அத்துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. என். டென்னிஸ்: தேர்ந்தெடுக்கும்போது விளம்பரப் படுத்தி, தேர்ச்சிபெற்றவர்களிடையே விளம்பரம் தந்து அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்லூரிகளுக் கான பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் யார் யாரிடத்தில் ஒப்படைக்கலாம் என்று துணை வேந்தர் அவர்களிடம் பட்டியல் கேட்டு அவர்கள் யார் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்களோ, நல்ல தமிழில் எழுதக் கூடிய வல்லுநர்கள் என்று கருதப்படுகிற, துணைவேந்தர் அவர்கள் யார் யாரை சிபார்சு செய்கிறார்களோ அப்படி சிபார்சு செய்கிறவர்களிடத்தில் பாடப்புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன.

திரு. கே. எ. வகாப்: இந்தப் பாடப்புத்தகங்களை எழுதுவதற்கு சில அறிஞர்களை ஏற்படுத்துவதாகச் சொல்கிறார்கள். சில ஆரம்பப் பாடப் புத்தகங்களில் மார்க்க விஷயங்கள் எழுதும்போது சில தவறான கருத்துக்கள் புகுத்தப்பட்டு விடுகின்றன. அவற்றை யெல்லாம் ஆராய்ச்சி செய்து அப்படிப்பட்ட தவறான கருத்துக்கள் ஏற்படாத விதத்தில் குறிப்பாக இஸ்லாமிய மதம் பற்றி எழுதும்போது அது சம்பந்தமாக பாண்டித்தியம் உள்ள வர்களை வைத்து எழுதுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தமாதிரி குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அது என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அத்துறையினரால் ஆராயப்படும்.

Hindi Pandits

* 5 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the services of the fully qualified Hindi Pandits appointed under rule 10 (a) (1), but who are given protection under G.O. Ms. No. 477, Education, dated 6th April 1968, have been terminated;

[1972 டிசம்பர் 2]

(*b*) if so, the number of fully qualified Hindi Pandits in this State who are affected thereby;

(*c*) whether the Government have any proposal to provide them alternative jobs; and

(*d*) whether it is a fact that the Government have made it compulsory for the Hindi Pandits who have attained the age of 50 years to appear for the training examination?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தகுதி பெற்ற, நிரந்தரமான இந்தி ஆசிரியர்கள் மாற்று வேலைகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். முழு தகுதி பெறாதவர்களும் தற்காலிகமாக வேலையில் அமர்த்தப்பட்டவர்களுமான சில இந்தி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

(இ) & (உ) : 7 தகுதி பெற்ற, ஆனால் தற்காலிக நிலையிலுள்ள ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு பின்னால் அவர்கள் எல்லோரும் பொருத்தமான மாற்று வேலைகளில் அமர்த்தப்பட்டு உள்ளார்கள்.

(எ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சிபெற்று ஆனால் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெறாத தகுதி பெற்ற எல்லா இந்தி ஆசிரியர்களும் பணி இருப்பு பயிற்சி பெற்று தேர்வு எழுத வேண்டும். ஒருவருக்கும் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that there are still some Hindi Pandits who have lost their jobs but who have not yet been rehabilitated—

மாற்று உத்தியோகங்கள் கொடுக்கப்படாமல் இன்னும் பல இந்திப் பண்டிட்ஸ் இருக்கிறார்கள் என்பது தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழுத் தகுதி பெற்றவர்களுக்கு முன்பே எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்தாகி விட்டது. முழுத் தகுதி பெறாதவர்கள் தாற்காலிகமாக அமர்த்தப்பட்டவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஆசிரியர் பயிற்சி பெறாமல் இருப்பவர்களுக்கு வெவ்வேறு மாவட்டங்களில் சில பல சலுகைகள் தந்து அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

[1972 டிசம்பர் 2

சிலபல இடங்களில் அவர்கள் வேலைவாய்ப்பு பெறும்முறையில் அவர்களை எடுத்துக்கொள்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப் படும்.

Orthopaedic Departments

* 6 *Q*.—THIRU N. K. PALANISWAMI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to set up Orthopaedic Departments in all the District Head Quarters Hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) நாகர்கோவில், நாகப் பட்டினம், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களைத் தவிர ஏனைய மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் முடவியல் மருத்துவப் பிரிவுகள் தற்போது உள்ளன. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும், முடவியல் மருத்துவத் துறைகள் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் எல்லா மாவட்டங்களிலும் படிப்படியான திட்டத்தின் கீழ் புறநோயாளிகளுக்கான முடவியல் மருத்துவத் துறைகள் மட்டும் திறக்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

(இ) முதற்கண் 1972-73-ல் சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனை களில் புறநோயாளிகளுக்கான முடவியல் மருத்துவத்துறைகள் திறக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஆர்தோபீடிக் டிப்பார்ட் மென்டில் ஃபிஸியோதெரபி முக்கிய பங்கு வகிக்கிறது. இளம் பிள்ளை வாதம், முடக்குவாதம் இவற்றிற்கு இந்த ஃபிஸியோ தெரபி மிகவும் அவசியமாக இருப்பதால்—கோவை ஜில்லாவில் ஒரே ஒரு ஃபிஸியோதெரபிஸ்ட்தான் ஆர்தோபீடிக் டிபார்ட் மென்டில் இருக்கிறார். ஆகவே, அம்மாதிரியான ஸ்டாப்களை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இந்த மருத்துவத் துறையில் வசதிகள் பலவும், தனித்தனியாக சிறப்புத்துறைகளை எப்படி எப்படி ஏற்படுத்த வேண்டும் என்பதுபற்றி அந்தத் துறையைச் சார்ந்த நிபுணர்கள் ஆராய்ந்து படிப்படியாக